
## டத்தாரான் மெர்டேகா தொடங்கி தேசிய பள்ளி வாசல் வரை

# மலாய் பாரம்பரிய மண்டலமாக்கப்படும்

கோலாலம்பூர், ஆக. 21- டத்தாரான் மெர்டேகா தொடங்கி சுல்தான் அப்துல் சமாட் கட்டடம் தொட்டு தேசிய பள்ளிவாசல் வரை அந்த இடம் முழுமையும் ஒரு தேசிய மலாய் பாரம்பரிய மண்டலமாக பிரகடனப்படுத்தப்படும் என்றும் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் தெரிவித்தார்.

கோலாலம்பூரின் மேம்பாட்டில் இந்த மலாய் பாரம்பரிய சின்னம் காக்கப்பட வேண்டும். அந்த இடம் முழுமையும் ஒரு பாரம்பரிய சின்னங்களாக அடையாளப்படுத்தப்படும் என்றார் அவர்.



ஒரு நாட்டின் தலைநகரில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுத் திட்டங்கள் தனித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் 2035 ஆம் ஆண்டு வரைக்குமான பூமிபுத்ரா பொருளாதார ஒருமைப்பாட்டு பெருந்திட்டத்தை தொடக்கி வைத்த போது அவர் சொன்னார்.

ஏற்கெனவே மேலவை முன்னாள் தலைவர் ரய்ஸ் யாத்திம் கோலாலம்பூர் மாநகர மன்றத்தை மலாய் உலகம் (டுனியா மலாயு) என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அது மலாய் கலாச்சார மற்றும் பாரம்பரியத்தின் அடையாளத்தை விளக்கும் இடம் என்றார் அவர். இதனிடையே காஸாவில் அமைதி மலர போர் நிறுத்தத்தை கொண்டு வரும் நடவடிக்கைக்கு மலேசியா தொடர்ந்து தனது ஆதரவை வழங்கிவரும் என்றும் பிரதமர் கூறினார்.

இது தொடர்பாக ஈரானிய அதிபர் டாக்டர் மசூட் மற்றும் ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் டாக்டர் பாஸெம் நைம் ஆகியோரிடம் தொலைப்பேசி வழி தொடர்பு கொண்டு இந்த உறுதியை அவர் வழங்கினார்.

துருக்கி, கத்தார், ஈரான் ஆகிய நாடுகளின் துணையுடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு மலேசியா துணை நிற்கும் என்றார் அவர்.

உடனடியாக இஸ்லாமிய ஒத்துழைப்பு மாநாட்டை கூட்டும் துருக்கியின் ஆலோசனைக்கும் மலேசியா தனது ஆதரவை தெரிவிக்கிறது என்றும் அவர் கூறினார்.